கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30.12.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## ஓசூர் சங்கர் பயோடெக் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தின் தாவர உயிரித் தொழில்நுட்பத் துறை, கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள சங்கர் பயோ–டெக் நிறுவனத்துடன் 27.12.2024 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. பதிவாளர் முனைவர் இரா.தமிழ்வேந்தன், தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மைய இயக்குனர் ந.செந்தில், திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குனர், முனைவர்.ஜெயக்குமார், தாவர உயிரி தொழில்நுட்பத் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவருமான முனைவர். ஈ.கோகிலாதேவி மற்றும் சங்கர் பயோ–டெக் நிறுவனத்தின் உரிமையாளர் திரு.ஆர்.சங்கர் மற்றும் சங்கர் பயோ–டெக்கின் தொழில்நுட்ப இயக்குனர் முனைவர். சி. இளையபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் பணியை உயிரி தொழில்நுட்ப இணை பேராசிரியர் முனைவர். சு.இராஜேஷ் ஒருங்கிணைத்தார்.

ஓசூரில் உள்ள சங்கர் பயோ–டெக் நிறுவனம் வணிக முக்கியத்துவம் வாய்ந்த தோட்டக்கலைப் பயிர்களின் தரமான திசு வளர்ப்பு கன்றுகளை உற்பத்தி செய்வதில் முன்னணியில் உள்ளது மற்றும் நாடு தழுவிய விநியோக வலையமைப்பைக் கொண்டுள்ளது. தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தின் தாவர திசு வளர்ப்பு ஆய்வகங்களில், வாழையில் தரமான திசு வளர்ப்பு கன்றுகளை உற்பத்தி செய்து மீள் கொள்முதல் வழி முறையின் மூலம் வழங்குவதற்காக தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**